## திராவிட இயக்கம் பெற்றுக்கொடுத்த

# உரிமைகளின் போராட்ட வரலாற்றை அறிந்து சிந்தனைத் தெளிவு பெறுங்கள்!

## இளம் பெண்கள் பாசறைக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து – கனிமொழி கருணாநிதி எம்.பி. வேண்டுகோள்!

**சென்னை, ஜன. 7 -**

**திராவிட இயக்கம் பெற்றுக் கொடுத்த உரிமைகளின் போராட்ட வரலாற்றை அறிந்துகொள்ளுங்கள்... சிந்தனைத் தெளிவு பெறுங்கள்" - என்று இளம்பெண்கள் பாசறை தொடக்க விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றும் போது கூறினார்.**

சென்னை - ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள முத்தமிழ் பேரவை அரங்கத்தில், சென்னை தென்மேற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் இளம் தலைமுறையினர் திராவிட இயக்க வரலாற்றை தெரிந்துகொள்ளும் வகையில் 04.01.2025 - சனிக்கிழமை அன்று, நடைபெற்ற இளம்பெண்கள் பாசறைக் கூட்டத்தை தொடங்கி வைத்து, திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி ஆற்றிய உரை வருமாறு:-

“அரசியல் களத்தை எடுத்துக் கொண்டோமென்றால் பாதி விஷயங்கள் நமக்கு சோஷியல் மீடியாக்கள் மூலமாகவே வருகிறது. யார் எதைச் சொன்னாலும் நாம் பார்த்துக்கொண்டே இருக்கிறோம், சில பேர் பேசுவது கேட்பதற்கு நன்றாக இருக்கும்.

எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிடுவேன் என்று சொல்வார்கள். ஆட்சிக்கு வர வாய்ப்பில்லாதவர்கள், எந்த பொறுப்பும் இல்லாதவர்கள் இப்படி பேசுவதை கேட்பதற்கு நன்றாக இருக்கும். சில நேரங்களில் நாம் நம்பிக்கை வைத்திருக்கும் விஷயங்களை அப்படியே உடைத்து நொறுக்குவது போல, நம் அறிவுக்குத் தாண்டிய விஷயங்கள் இருக்கிறதாகவும், நம்மால் புரிந்துகொள்ள முடியாத விஷயங்கள் நிதர்சனத்தில்இல்லாதவிஷயங்களையெல்லாம் கொண்டு வருவதுபோல சில பேர் பேசுவார்கள்.

### சிலர் சரித்திரத்தையே மாற்றிப் பேசுவார்கள்!

இன்னும் சில பேர் சரித்திரத்தையே மாற்றிப் பேசுவார்கள். நம் கண்முன்னே நடக்கும் சில சரித்திர விஷயங்களை சமகால சரித்திரத்தைக் கூட மாற்றி பொய் சொல்கிறோம் என்ற பயமும் கவலையும் இன்றி தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்., அது அவர்களுக்கு மேலே இருந்து கீழே இருப்பவர்கள் வரை அனைவருக்கும் பழகிவிட்டது.

இத்தனை தவறான செய்திகளும் நம்மை சேர்ந்துகொண்டிருக்கக் கூடிய காலகட்டம் இது. மேடையிலும் சில தலைவர்கள் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல், நிதானம் இல்லாமல் பேசுகிற நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிலையில் நாம் யார், நமது சரித்திரம் என்ன என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த மேடையில் பல பெண்கள், இரண்டே இரண்டு ஆண்கள் இருக்கிறார்கள். எப்போதாவது தான் இதுபோல நடக்கும். பொதுவாக மேடைகளில் எல்லாருமே ஆண்களாக இருப்பார்கள், அல்லது இரண்டு அல்லது ஒரு பெண் இருப்பார்கள். ஆனால் இந்த மாற்றம் இந்த மேடையில் இந்த அரங்கத்தில் இருப்பது, இத்தனை பெண்கள் வேலைக்கு செல்பவர்களாக, யாருக்கும் அஞ்சாமல் தலைநிமிர்ந்து நிற்பவர்களாக இருப்பதன் காரணத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

நாம் இங்கே வந்து நிற்கிறோம், உட்கார்ந்திருக்கிறோம் என்றால் அதற்கு முன் என்னென்ன போராட்டம் நடந்தது, எத்தனை தியாகங்கள் செய்யப்பட்டிருக்கிறது, எத்தனை திட்டங்கள் வகுக்கப்பட்டது என்பதை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு நீங்கள் என்ன முடிவெடுக்கிறீர்களோ அது உங்கள் கைகளில் இருக்கிறது.

### திராவிடஇயக்கத்தின் தாரக மந்திரம் என்ன?

திராவிட இயக்கத்தின் தாரக மந்திரம் சிந்தனை தெளிவுதான். விஷயங்களை நாம் சொல்ல வேண்டியது, முடிவுகளை நீங்கள்தான் எடுக்க வேண்டும். ஆனால் விஷயங்களை முழுமையாக தெரிந்துகொள்ளாமல் தவறான செய்திகளை நம்பி முடிவுகளை எடுப்பது என்பது நம்முடைய எதிர்காலத்துக்கு மிகப்பெரிய பிழையாக ஆகிவிடும். நம்முடைய அடுத்த தலைமுறைக்கு அது மிகப்பெரிய தவறாக ஆகிவிடும்.

அதனால்தான் இங்கே நம்முடைய இயக்கம் செய்த போராட்டங்கள், அதன் மூலம் செய்த சாதனைகள எல்லாம் அண்ணன் சுப.வீ, மதிவதனி போன்றவர்கள் உங்களுக்கு எடுத்துச் சொல்கிறார்கள்.

இன்றைய முதலமைச்சர் அடிக்கடி சொல்லக் கூடிய வார்த்தை திராவிட மாடல் ஆட்சி. பலருக்கு அது பிடிக்காமல் இருக்கிறது, விமர்சனங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வார்த்தையை முதல்வர் சொல்வதற்கு பின்னால் இருக்கக் கூடிய சரித்திரம் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரே ஒரு உதாரணம்...பெண்களுக்கு வாக்குரிமை வேண்டும் என்பதற்காக உலகின் பல நாடுகளில் போராடினார்கள், அடிபட்டார்கள், கொல்லப்பட்டார்கள். முன்னேறிய நாடுகளில் கூட பெண்கள் மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளானார்கள்.

### நீதிக்கட்சி ஆட்சியில்தான் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை!

இவ்வளவு போராட்டத்துக்குப் பிறகுதான் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடைத்தது. கிட்டத்தட்ட 1911க்குப் பிறகுதான் பல முன்னேறிய நாடுகளில் கூட பெண்களுக்கு ஓட்டுப் போடும் உரிமை கிடைத்தது.

ஆனால் இந்தியாவிலேயே முதல் முறையாக திராவிட இயக்கமாம் நீதிக் கட்சியின் ஆட்சிதான். திராவிட இயக்கம் என்பது திமுகவுக்கு முன்பு, தந்தை பெரியாருக்கு முன்பு நீதிக் கட்சியில் இருந்தே தொடங்குகிறது.

1920 ஆம் ஆண்டில் நமக்கு எந்த போராட்டமும் இன்றி ஒரு கோரிக்கையை மட்டும் ஏற்றுக் கொண்டு, இந்தியாவிலேயே முதல் மாகாணமாக பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை அளித்தது.

பெரியாரின் கனவு பெண்கள் படிக்க வேண்டும், பெண்கள் வேலைக்குப் போக வேண்டும் என்பது. பெண்களுக்கு சொத்தில் சம பங்கு என்பது அப்போதெல்லாம் கிடையாது. நாம் பேசுகிறோம்; கண்ணகி பற்றி பெருமையாக பேசுகிறோம். பாண்டிய மன்னனின் அரச சபையில் சென்று தேரா மன்னா என்று தனது கணவனின் உரிமைக்காக போராடுகிறாள். ஆனால் தன்னுடைய உரிமை என்று வந்தபோது அந்த பெண் வாயே திறக்கவில்லை. அதுதான் நிதர்சனம்.

### பெண்களுக்கு உரிமை கிடைத்திருப்பதற்கு பெரியார் தான் காரணம்!

பெண்கள் தங்கள் உரிமைகளுக்காக போராட முடியாத கேள்வி கேட்க முடியாத நிலையில்தான் இருந்தோம். ஆனால் இன்று நமக்கு இத்தனை உரிமைகளும் கிடைத்திருக்கிறது என்றால், அதற்கு பெரியார்தான் மிக முக்கிய காரணம்.



நான் பெண்ணியம் பற்றி எத்தனையோ தலைவர்களின் புத்தகங்களை தேடிப் படித்திருக்கிறேன். ஆனால் இன்றுவரைக்கும் தந்தை பெரியாரைக் கடந்து பெண் விடுதலை பேசிய தலைவர் உலகில் எந்த மொழியாகட்டும் எங்கேயும் இல்லை. அவ்வளவு ஆணித் தரமாக பேசியவர் பெரியார்.

உனக்கு எந்தத் தடை வந்தாலும் அது அன்பாக வரலாம் பாசமாக வரலாம், காதலாக வரலாம், குடும்பமாக வரலாம், சமூகமாக வரலாம், இப்படி உனக்கு தடை எந்த வடிவத்தில் வந்தாலும் அதை உடைத்துவிட்டு உன் இலக்கை எட்டிப் பிடி என்று சொன்ன ஒரே தலைவர் பெரியார் மட்டும்தான்.

அவரை சில பேர் இன்றும் கொச்சையான வார்த்தைகளால் விமர்சனம் செய்யக் கூடிய நிலையை பார்க்கிறோம். அது ஒன்றுமில்லை. பெரியாரைப் பற்றி பேசினால் தனக்கு ஓர் அடையாளம் கிடைக்கும் என்பதற்காகத்தான்.

பழைய படம் வந்திருக்கும். அடுத்து ஒரு புதிய படம் வரும். அப்போது பழைய படத்தைப் பற்றி யாரும் பேச மாட்டார்கள். புதுபடம்தான் ஓடிக் கொண்டிருக்கும். அந்த நேரத்தில் பழைய படத்தைப் பற்றி பேசினால் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்பலாம் என்பது போல பெரியாரை பற்றி பேசினால் லைம் லைட்டுக்கு வரலாம் என்று பேசுகிறார்கள்.

ஆனால் பெரியாரைப் பற்றி விமர்சிப்பவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். பெரியாரைப் பற்றி மேடையேறி பேசுபவர்களுக்கு அந்த தடத்தை வகுத்துக் கொடுத்ததே தந்தை பெரியார்தான் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

### பெரியாரின் கனவுதான் பெண்கள் முன்னேற்றம்!

உங்கள் வீட்டில் இருக்கும் நீங்கள், உங்கள் பிள்ளைகள் எல்லாம் படித்துவிட்டு இந்த இடத்தில் நிற்கிறீர்கள் என்றால் உங்களுக்கு சமூகத்திலே ஒரு வாய்ப்பு கிடைத்தது என்றால் அதை உருவாக்கித் தந்ததே பெரியார்தான். அதனால் அவரை விமர்சிப்பதற்காக நீங்கள் மேடையேறினாலும், நீங்கள் மேடையேறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த பெரியாருக்கு தலைவணங்கி விட்டுதான் நீங்கள் ஏற வேண்டும்.

எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் ஒவ்வொரு எழுத்துக்குப் பின்னாலும் நிற்பவர் தந்தை பெரியார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பெரியாருடைய கனவுதான் பெண்கள் முன்னேற்றம், பெண்களுக்கு சொத்திலே பங்கு என்பது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு முன்பே தமிழகத்தில் பள்ளிகள் திறக்கப்பட்டன. ஆனால் பெண்கள் தங்களது தலைமுறையில் முதல் முதலாக கல்லூரிக்கு போகிற போது அவர்களுக்கு இலவசக் கல்வி கொண்டுவந்தது தலைவர் கலைஞர்தான்.

### திருமண உதவித் தொகை கொண்டுவந்தவர் கலைஞர்!

பெண்கள் பத்தாவது வரைக்கும் படித்தால் அவர்களுக்கு திருமண உதவித் தொகை என்றொரு திட்டத்தை கலைஞர் கொண்டுவந்தார். நான்கூட நினைத்தேன்; எதற்கு இப்படி ஒரு திட்டம் என்று! படிப்பதற்கு பணம் கொடுக்கலாம், எதற்கு திருமணத்துக்கு பணம் என்று கூட சிலர் கேட்டார்கள்.

ஆனால் சமூகத்தை நாம் ஒருநாளில் மாற்றிவிட முடியாது. அது கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நடக்கும். ஒரே நாளில் சினிமா போல ஒரு நாள் முதல்வர் போல எல்லாவற்றையும் அடித்து உடைத்துவிடலாம் என்று சொல்வார்கள். ஆனால் அது சாத்தியமல்ல; நிதர்சனமல்ல.

சமூகம் என்பது அதன் கட்டுமானங்கள், அதன் கட்டமைப்புகளை மாற்றிக் கொள்வதற்கான அவகாசத்தையும் நாம் தந்தால்தான்... அந்த மாற்றம் சீரான மாற்றமாக காலத்துக்கும் நிற்கக் கூடிய மாற்றமாக இருக்க முடியும்.

அந்தவகையில் ஒவ்வொரு குடும்பத்திலும் பெண் குழந்தை இருந்தால், அந்த பெண்ணின் திருமணம்தான் அவர்களுக்கு மிகப்பெரிய கனவாக இருக்கும். படிக்க வைத்துவிடுங்கள். நான் கல்யாணத்துக்கு காசுகொடுக்கிறேன் என்று தலைவர் கலைஞர் அறிவித்ததும் பெண் குழந்தைகளை இரண்டாவது, மூன்றாவது படிக்க வைத்து நிறுத்திவிடலாம் என்று நினைத்த குடும்பங்கள் கூட... தங்கள் பெண்களை பத்தாவது வரை படிக்க வைத்தார்கள்.

அந்த பெண்கள் பத்தாவது வரைக்கும் படித்துவிட்டால், பன்னிரெண்டாவது அதன் பின் கல்லூரி போகும் அளவுக்கு தன்னம்பிக்கை பெற்றுவிடுகிறார்கள். மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம், வீட்டை விட்டு வாசல்படி தாண்டி வராத பெண்கள் வங்கிகளுக்கு சென்றார்கள், வங்கி அலுவலர்களிடம் பேசினார்கள். அந்த தைரியத்திலே சுய உதவிக் குழுக்கள் மூலம் உள்ளாட்சித் தேர்தல்களிலே நின்றார்கள். வெற்றி பெற்றார்கள். அந்த ஊர் நிர்வாகத்தை அவர்கள் கையிலே எடுத்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார்கள்.

### முதல்வரின் புதுமைப்பெண் திட்டம்!

இப்போது திருமணம் என்பதெல்லாம் பின்னாடி போய்விட்டது. பெண்கள் கல்லூரி படிக்க வேண்டும் என்பதை சமூக ஏற்றுக் கொண்டு விட்டது. இந்த காலகட்டத்திலேதான் நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், மாதம் ஆயிரம் ரூபாய் தருகிறேன் படிப்பை விட்டு விடாதே என்று புதுமைப் பெண் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

சமீபத்திலே கூட புதுமைப் பெண்கள் திட்ட விரிவாக்க நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முதலமைச்சர் அதில் கலந்துகொண்ட மாணவிகளைப் பார்த்து, ‘என் மகள்கள்’ என்று வாஞ்சையோடு அழைத்து. படியுங்கள் படியுங்கள் என்று சொன்னார்.

மக்களுக்கு கஷ்டம் என்றால் வந்து கூட கேட்க முடியாமல் இருப்பவர்கள் கூட ஆட்சிக்கு வந்துவிட்டால் நம் நிலை என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதையெல்லாம் தாண்டி மிக முக்கியமாக நம்முடைய சுயமரியாதையை, நாம் போராடிப் பெற்றிருக்கும் உரிமைகளை நாம் பெற்றிருக்கும் பகுத்தறிவை உடைத்து நொறுக்குவதற்காகவே சிலர் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் யார் என்று உங்களுக்கே தெரியும்.

### பா.ஜ.க.வின் பொய் பிரச்சாரம்!

பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு சட்டம் கொண்டுவந்தார்கள். அந்த சட்டம் எப்போது பயன்பாட்டுக்கு வரும் என்பதே தெரியாமல் சட்டம் கொண்டுவந்த பாஜகவை நாம் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சொல்லும் எல்லாமே பொய்தான். ஒரு சட்டம் போட்டிருக்கிறார்கள்... பெண்களுக்கு இட ஒதுக்கீடு எப்போது வரும் என்றால் இந்தியா முழுதும் மக்கள் தொகை கண்கெடுப்பு நடத்தி முடித்து, அதன் பின் தொகுதி மறு வரையறை செய்து முடித்து அதில் சில பிரச்சினைகள் வரும், அவற்றையும் தீர்த்துதான் இந்த ஒதுக்கீடு நடைமுறைக்கு வரும்.

தொகுதி மறு சீரமைப்பில் தமிழ்நாட்டுக்கு பிரச்சினைகள் உள்ளன. திராவிட ஆட்சியில் கல்வி, சுகாதார விழிப்புணர்வு அதிகமாகும் போது நிச்சயமாக குழந்தை பிறப்பு விகிதம் குறைந்திருக்கிறது. அதனால் தமிழ்நாட்டுக்கு தொகுதிகள் குறையலாம். நம் உரிமைகள் போகும். அதிக குழந்தை பிறப்பு விகிதம் கொண்ட மாநிலங்களுக்கு தொகுதிகள் அதிகமாகும். இதை எதிர்த்து நம்மைப் போல நிறைய மாநிலங்கள் வழக்காடுவோம். இத்தனையும் தாண்டி இந்த பெண்கள் இட ஒதுக்கீடு சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு 100 வருடங்கள் ஆனாலும் முடியாது. ஆனால் இதை ஒரு சாதனையாக பேசிக் கொள்கிறது ஒரு இயக்கம்.

ஒரு பெண் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாகும்போது அவர்கள் கேட்கிறார்கள், ‘அந்த நேரத்தில் நீ ஏன் அங்கு சென்றாய்... அவனை அண்ணா என்று அழைத்தால் உன்னை விட்டு விட்டுச் சென்றிருப்பானே... கையில் ஏன் செல் போன் வைத்திருந்தாய்?’ என்று பாதிக்கப்பட்டவர்களையே குறை சொல்லக் கூடிய நிலையை அவர்கள் உருவாக்குகிறார்கள்.

ஒடுக்கப்பட்ட சமூகங்கள் ஒடுக்கப்பட்டதாகவே வாழ வேண்டும் என்று நினைக்கும் அவர்கள்தான் நம்முடைய கொள்கை எதிரிகள் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அதனால் நமக்கு யார் எதிர்காலத்தை உருவாக்கித் தரக் கூடியவர்கள், யார் நமது எதிர்காலத்தை அழிக்கக் கூடியவர்கள் என்பதை விளக்குவதுதான் இந்த கருத்தரங்கம், இதன் மூலம் நீங்கள் தெளிவோடு செல்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது”

இவ்வாறு கனிமொழி கருணாநிதி உரையாற்றினார்.

உடன், சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழகச் செயலாளருமான மயிலை த. வேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.கருணாநிதி, தமிழரசி, திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன், மாநில மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவர் குமரி விஜயகுமார், திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் மதிவதனி, சமூக வலைதள பொறுப்பாளர் யாழினி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அரசர்குளம் தென்பாதி ஊராட்சி, பாரதிதாசன் நகர் பகுதியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ், ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (05.01.2025) திறந்து வைத்தார். உடன் அறந்தாங்கி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




திருவண்ணாமலையில் சமூகநீதி மற்றும் பகுத்தறிவு பாசறைக் கூட்டத்தை, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்து உரையாற்றினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், மாநில மருத்துவர் அணித் தலைவர் கனிமொழி என்.வி.என்.சோமு, துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், செயலாளர் எழிலன் நாகநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன், மலையரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மு.அம்பேத்குமார், ஒ.ஜோதி, நல்லதம்பி, வில்வநாதன், ராஜேந்திரன், அய்யப்பன், மணிக்கண்ணன், மாவட்ட அமைப்பாளர்கள் பிரவீன் ஸ்ரீதரன், மகேந்திரன் மற்றும் சமூகநீதி காவலர்கள், மருத்துவத்துறையில் பணியுரியும் ஊழியர்கள் மற்றும் பலர் உள்ளனர்.